பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

-7-6-1993 யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 25 திங்கட்கிழமை (07-06-1993) UTHAYAN --A Lively National Tamil Daily கதிர் 191

# வெளிநாட்டு சமாதானக் குழு இன்று யாழ்ப்பாணம் வருகை

## அரசு - புலிகள் நேரடிப் பேச்சுக்கு ஏற்பாடு செய்வதற்கு முயற்சிக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 7

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவும் முயற்சியில், தென்கிழக்காசிய, தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள், மதகுருமார் அடங்கிய சமாதானக் குழு, இன்று யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவ ஹெலிக்கொப்டர் மூலம் சமாதானக் குழு உறுப்பினர்கள் அறுவரும், மற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த பௌத்த குருமார், புத்திஜீவிகள் சிலரும் இன்று யாழ்ப்பாணம் வந்தடைவர் என்று வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

ஸ்ரீலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதே சமாதானக் குழுவின் பிரதான பணியாக இருக்கும் என்று அறியப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஒரு பகுதியை சமாதான — தாக்குதலற்ற பிரதேசமாக பிரகடனம் செய்து, அங்கே இருதரப்பினரும் மனம்திறந்து பேசுவதற்கு வழிமுறைகளை உருவாக்கிக் கொடுப்பதற்கான சாத்தியங்களை சமாதானக் குழு கண்டறியும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவரைச் சந்திக்கவும் சமாதானக் குழு விருப்பம்

கொழும்பு, ஜூன் 7

இன்று யாழ்ப்பாணம் செல்லும் வெளிநாட்டு சமாதானத் தூதுக்குழுவினர் தமிழ் மக்களின் துன்ப துயரங்களை நேரில் கண்டறிவர். ஆஸ்பத்திரிகளுக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் இடங்களுக்கும் சென்று அங்கும் நிலைமைகளை நேரில் கண்டறிவர்.

—என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனைச் சந்தித்துப் பேசவும் இக் குழு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒரு வாரகாலம் யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் இக் குழுவினர் விடுதலைப் புலிகளினால் சிறைபிடிக்கப்பட்டுள்ள 38 பொலீஸாரையும் ஒரு சிப்பாயையும் விடுதலை செய்யும்படி விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுப்பார்கள் என்றும் தெரிகிறது.

## வடக்கு-கிழக்கை இணைப்பதே இனப்பிரச்சினைக்கு ஒரே தீர்வு

### தொண்டமான் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 7

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால் வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைத்தே ஆகவேண்டும்.

—இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கூறிய இந்த யோசனைதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண மிகச் சிறந்ததாகும்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஒருங்கிணைந்த மாகாணத்தில் அதிக பட்ச சுயாட்சி உரிமை கிடைக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண மீண்டும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் முயற்சி மேற்கொள்வதால் பயன் ஏதும் விளையப் போவதில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளில் கலந்துகொள்வதில்லை என்று முடிவு செய்து அக்குழுவைப் பகிஷ்கரித்து வரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மீண்டும் அக் குழுவின் அமர்வுகளில் கலந்துகொள்ளப்போவதில்லை.

விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுவதில் இருந்து விலகி, இனப்பிரச்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சமாதானம் ஏற்படுத்துவதில் அனுபவமுடையோர் வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 7

இன்று யாழ்ப்பாணம் வரும் வெளிநாட்டு சமாதானத் தூதுக்குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் சமாதானத்தை உண்டாக்குவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதில் அனுபவம் உள்ளவர்கள் என்று அறியப்படுகிறது.

தூதுக்குழுவின் தலைவர் வண. சோமாச்சை குசலி இற்றோ, கம்போடியாவில் அந்நாட்டு அரசாங்கத்துக்கும் கம்ரூச் போராளிகளுக்கும் இடையில் சமாதானப்பேச்சுக்கள் நடப்பதற்கு வழி செய்தவர்.

பிலிப்பீன்ஸ் நாட்டு ஆயர் மேதகு ஜுவாஸ் டி டொயஸ் பியூமிலன் பிலிப்பீன்ஸில் போராளிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் நடப்பதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தவர்.

மற்றொரு உறுப்பினரான, பேராசிரியர் அஸ்கர் அலி எஞ்சினியர் இஸ்லாமிய அடிப்

(5ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை - திருமலை இடையே "நகர" சேவை?

யாழ்ப்பாணம், ஜூன் 7

திருகோணமலைக்கும்-பருத்தித்துறைக்கும் இடையில் வாரத்தில் இரு தடவை ''நகர'' பயணிகள் கப்பல் சேவையை நடத்த புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சு முயற்சி மேற்கொண்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்சமயம் திருகோணமலைக்கும் தீவுப்பகுதிக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் ''நகர'' கப்பலை, அந்தச் சேவைக்கு புறம்பாக, திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும்—

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் இணக்கத்தைப் பெறும் முயற்சியில் புனர்வாழ்வு அமைச்சு ஈடுபடவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## அமைதிப் படையை அழைப்பதற்கு நவசமசமாஜக் கட்சி கடும் எதிர்ப்பு

லண்டன், ஜூன் 7

வெளிநாட்டிலிருந்து அமைதிப் படையை அழைத்து, இலங்கை மக்களை அடக்கும் முயற்சியைக் கடுமையாக ஆட்சேபிக்கிறோம்.

—இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார். பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படி கூறினார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது :—

அமைதிப்படையை இலங்கைக்கு அழைத்து—

அவர்கள் மூலம் விடுதலைப் புலிகளைப் பின்னுக்குத் தள்ளி—

பிராந்திய மட்டத்தில் மாகாண சபைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் அதிகாரப் பகிர்வை செய்து—

வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசைச் சேர்ந்தோரும், அரசில் சேர்ந்து கொள்ள விரும்போரும் முயற்சிப்பதாக ஒரு கருத்து கடந்த சில வாரங்களாகப் பரவலாக நிலவி வருகிறது.

இந்த விடயங்கள் குறித்தும், இவற்றுக்கு ஏற்றபடி அரசமைப்பைத் திருத்தம் செய்வது குறித்தும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா ஜனாதிபதி விஜேதுங்காவுடன் பேசியிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இதிலிருந்து —

மீண்டும் அமைதிப்படை ஒன்றை தருவித்து, போராட்டத்தைப் பின்னுக்குத் தள்ளி, [illegible] தைச் செயற்படுத்த முயற்சி

(5ஆம் பக்கம் பார்க்க)

## ம.எண்ணெயுடன் நில்கிரி இவ்வாரம் வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஜூன் 7

ஒரு தொகுதி பரல் மண்ணெண்ணெயுடன் 'நில்கிரி' கப்பல் இவ்வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் இக்கப்பலில் மண்ணெண்ணெய் ஏற்றப்பட்டிருப்பதாகவும்—

கொழும்பில் இருந்து இக்கப்பல் புறப்படுவது பற்றிய தகவல் இன்னும் இங்கு கிடைக்கவில்லை என்றும் நேற்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### லலித் கொலை விசாரணை:

## இரு தமிழர்களைத் தேடி வருகிறதாம் பொலீஸ்!

லலித் அத்துலத் முதலி கொலை தொடர்பாக மேலும் இரு தமிழர்களை பொலீஸ் தேடி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த இருவரையும் கண்டு பிடிக்க உதவுமாறு இக் கொலை குறித்து விசாரித்து வரும் குற்றப் புலனாய்வுப் பணியகம் பொதுமக்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

ஐயாக்கண்ணு சத்தியவேல் அல்லது பாபு (26 வயது) பேதுருப்பிள்ளை ஜெபநேசன் ஆகிய இருவருமே தேடப்படுபவர்களாவர்.

முதலாமவர் ரத்தகொடவத்த என்ற இடத்தில் வசித்தவர் எனவும், இரண்டாமவர் முல்லைத்தீவு, அலம்பிலில் வசித்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் புகைப்படங்கள் ரூபவாஹினியில் காண்பிக்கப்பட்டன. அவர்களின் அடையாளங்கள் குறித்தும் விவரிக்கப்பட்டது. (ஓ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியோதய சனசமூக நிலையம்
# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

05-06-93இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த மேற்படி சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களால் 05-07-93ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதென்பதையும் முடிவுகள் 07-07-93 பத்திரிகையில் வெளியாகும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

நா. வே. தம்பியப்பா
கௌரவ செயலாளர்.

சூரியோதய சனசமூக நிலையம்,
கோப்பாய் தெற்கு.

(25998)

---

உ

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# பரிசுத் தினம் - 1993

08-06-1993 செவ்வாய்க்கிழமை
முற்பகல் 9-30 மணி

முதன்மை விருந்தினர்
திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள்
(மாநிலக் கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)

பரிசில் வழங்கல்
திருமதி தேவராணி சுந்தரலிங்கம் அவர்கள்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

1993-06-05 (சி-5219)

---

## ஆலயங்களில்

கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டம் பரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறும். (த)

o o o

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் திருமஞ்ச வெள்ளோட்டமும், மஞ்ச கும்பாபிஷேகமும், திருவிழாவும் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் பிற்பகல் 2 மணிக்கு அம்மாள் வெளிவீதியுலா வருவார்.

## இன்று

வட்டுக்கோட்டை துணைவி தமிழன் சனசமூக நிலையத்தினர் இன்று பிற்பகல் 2 மணிக்கு பன்னவேலைப் பயிற்சி நிலையம் ஒன்றை திறந்து வைக்கவுள்ளனர். (ஒ-160)

---

# வல்வை நகர அபிவிருத்திக்கு நாளை அங்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 7

வல்வை நகரசபை பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் முன் முயற்சிகளில் வல்வை புனரமைப்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக பல்வேறு தரப்பினரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கருத்தரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தில் நாளை செவ்வாய் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள், யாழ். செயலகம் மற்றும் திணைக்களங்களைச் சேர்ந்த உயரதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-5)

## முதலாம் தர பதவியுயர்வு

உடுவில் ஜூன் 7

பதினைந்து வருடங்களுக்கு மேலாக சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள் மற்றும் எழுது வினைஞர்களாக கடமையாற்றும் அரசாங்க ஊழியர்கள் முதலாம் தரத்துக்கு பதவி உயர்த்தப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பெரும் எண்ணிக்கையான அரச ஊழியர்கள் பயனடைய உள்ளனர். (த 152)

---

## OIL Day Class

புதிய பிரிவு

ஆரம்பம்:
08 — 06 — 1993
செவ். 8-00 a. m.

**SHAMROCK**

யாழ் சுண்டுக்குளி.

(26003)

---

உ

கோப்பாய் பலானை அருள்மிகு கண்ணகை அம்மன்
கோவில் திருமஞ்ச வெள்ளோட்டமும்
மஞ்ச கும்பாபிஷேக திருவிழாவும்

காலம்: 7-6-1993 திங்கட்கிழமை திருமஞ்ச வெள்ளோட்டம் மு.ப. 9.00 மணிக்கும், திருமஞ்ச கும்பாபிஷேகம் மு.ப. 11.00 மணிக்கும் திருமஞ்சத்தில் அம்பாள் வெளிவீதி உலா பி.ப. 2.00 மணிக்கும் இடம்பெறும். அடியார்கள் வருகை தந்து அம்பாள் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

சிறப்பு அருளுரை வழங்குபவர்;
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

(26007) பரிபாலன சபையினர்

---

வெளிவந்துவிட்டது!

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின்
மீள்பார்வையுடன் கூடிய
## சைவநெறி ஆண்டு - 8

ஆக்கம்: க. சந்திரசேகரம்
நைதடி முத்துக்குமாரசுவாமி ம. வி.
வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம்

ஏக விநியோகஸ்தர்கள்:
சோதி புத்தகசாலை,
மீன் சந்தை முன்பாக,
பஸ் நிலையம்,
சாவகச்சேரி.

(சி-5221)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
## கேள்வி அறிவித்தல்

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான பெற்றோலில் இயங்கும் மோட்டார் வாகனம் ஒன்றை (இயந்திரத்தின் பரிவலு 16.2) டீசலில் இயங்குவதாக மாற்றுவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. கேள்விதாரர்கள் 10-06-93, 11-06-93 ஆகிய இரு தினங்களிலும் வேலை நேரத்தில் வாகனத்தை பார்வையிடலாம்.
3. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 150/- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்திப் பற்றுச் சீட்டை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளரிடம் 21-06-93க்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளரிடம் 23-06-93 அன்று 10-00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.
5. எந்தக் கேள்விப் பத்திரத்தையும் நிராகரிக்கும் உரிமை யாழ். பல்கலைக்கழக கேள்விச் சபைக்கு உண்டு.

- பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
த. பெ. இல 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-5194)

---

நயினாதீவு
## தில்லைவெளி பிடாரி அம்பாள்
# வருடாந்த திருவிழா உற்சவம்

04-06-1993 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிவிட்டது. 12-06-1993 சனிக்கிழமை பொங்கல் விழா நடைபெறும் என்பதை அம்பிகை அடியார்களுக்கு அவர்கள் தாம் வசிக்கும் இடங்களில் தம் வசதிக்கேற்ப விரதம் அனுஷ்டிக்கு முகமாக அறியத்தருகின்றோம்.

— நிர்வாக உரிமையாளர்கள்.

(26000)

---

மூளாய் இந்து இளைஞர் மன்றம்
# அறிவித்தல்

மூளாய் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் தொடர்பாக 24-05-1993 உதயனில் வெளியாகிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மூளாய் இந்து இளைஞர் மன்றம் மேற்படி ஆலயத்தின் மேற்குப் புற சுவர்த் திருப்பணிக்காக முகாமையாளரும், பரம்பரைத் தர்மகர்த்தாவும் எனக்கூறிக்கொள்ளும் கந்தையா குமாரசாமி என்பவரிடம் எவ்வித அனுமதியும் பெறவில்லை என்பதை சகல பொதுமக்களுக்கும் அறியத்தருகிறோம். அத்துடன் கடந்த காலங்களில் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட எத்திருப்பணிகளுக்கும், வருடாந்தம் மேற்கொள்ளப்படும் ஆலயப் பூச்சு வேலைக்கும் எவரிடமும் அனுமதி பெறவில்லை என்பதையும், பொது ஆலயமாகிய மேற்படி ஆலயத்தின் திருப்பணிக்காக பரிபாலனசபை அமைக்கப்பட முன்பு எவரிடமும் அனுமதி பெறத் தேவையேற்படவில்லை என்பதையும் தெரிவிக்கிறோம்.

— நிர்வாக சபை.

(25994)

---

# "கோபாம்" மருந்துகள் விற்பனை நிலையம்

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஈழத்து நூல் சஞ்சிகை ஓவியம், சிற்பம், 'சித்த வைத்தியம்' கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த கோபாம் சித்த வைத்திய மருந்துகள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க பின்வரும் முகவரியில் விற்பனவு செய்ய விற்பனவு நிலையம் 07-06-93 தொடக்கம் ஆரம்பிக்கப்படுகின்றது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.


விலாசம்:
விற்பனவு நிலையம்
572, யாழ் மருத்துவமனை வீதி,
பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு
திணைக்கள அலுவலகம்,
யாழ்ப்பாணம்,

சித்த வைத்திய கூட்டுறவுச் சங்க
நிர்வாகிகள்

(26008)

---

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 02 | 07 |
| — | — |
| 05 | 06 |
| — | — |
| 1947 | 1990 |

அமரர்
## சலமோன் மதுரநாயகம்
(சாரதி, மங்கை ட்ரான்ஸ்போர்ட் சேர்விஸ்)

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
மனைவி, பிள்ளைகள்.

உரும்பராய் கிழக்கு. (26001)

---

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

## செல்வன் வீரபத்திரன் சிவகுமாரன்

தாயின் மடியில்: 10 — 07 — 1966
இறைவன் திருவடியில்: 09 — 05 — 1993

09-05-1993 திங்கள் அன்று எனது அருமை மைந்தன் செல்வன் வீ. சிவகுமாரனின் இறுதிக் கிரியைகள் நடைபெற்றபோது எனது இல்லத்திலும், மயானத்திலும் கலந்து கொண்ட, அனுதாபச் செய்திகள் அனுப்பிய நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எனது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதுடன், 08-06-1993 செவ்வாய்க்கிழமை நடைபெறும் எனது புதல்வனின் 31ஆம் நாள் ஆத்மசாந்திக் கிரியையிலும், நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர் சார்பாக;
திரு. பொ. வீரபத்திரன்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

(25972)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிற்பிஜயா' பிரியாவிடைச் சிறப்பிதழ்

## இவர்கள் வாழ்த்துகிறார்கள்..

### வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்

''கலைச்செல்வி'' எனும் சஞ்சிகை ஆசிரியராகக் கடந்த காலங்களில் அளப்பெரும் பணியாற்றினார். சிற்பி என்று எல்லோராலும் இனிமையாக அழைக்கப்படும் அதிபர் திரு சிவசரவணபவன் அவர்கள். எழுத்தாளர் உலகிலும், வாசகர் உள்ளங்களிலும் செதுக்காத சிற்பியாக அமைந்துவிட்டார்.

சேவையிலிருந்து இளைப்பாறுவதற்கு முன்னர் யாழ் வைத்தீஸ்வரக் கல்லூரியின் அதிபராகவும், வண்ணார் பண்ணை தெற்குக் கொத்தணி அமைப்பின் கொத்தணி அதிபராகவும் பணிபுரிந்து பாடசாலைகளின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த கல்வியாளர் அவர்

சிற்பி அவர்கள் தொடர்ந்தும் பரந்த அளவில் தமது சேவையை எமக்கு நல்குவார் என்று எமது கல்விச் சமுதாயம் வேண்டி நிற்கும் வேளையில், அவர் என்றும் உள, உடல் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு இறைவன் அருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

-இ சுந்தரலிங்கம்.

### யாழ் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர்

எழுத்துலகின் தாரகையாய் இளம் இதயங்களைக் கவர்ந்து, அன்னாரைத் துலக்கமுறச் செய்த தூயவர் சிற்பி சிற்பி இன்று தமது அறுபதாவது அகவையை எட்டிப்பிடித்துள்ளார்.

சான்றோர் சால்பு மண்ணைப் பசுமையாக்கும்; மக்கள் உள்ளத்தைச் செழுமையாக்கும். வாளினும் கூரிய ஆயுதமான பேனா சிற்பியைக் கலைச்செல்வியூடாகப் பிரபல்யமாக்கியது அன்னாரின் செயற்திறன் செப்பரியது. இவர் போன்ற சிந்தனைச் செம்மல்கள் செந்தமிழ் நாட்டிற்கு எழில் சேர்ப்பர். தாமின்புறுவது உலகின் புறக்காணும் பேதமற்ற பெருவாழ்வுக்கு தம்மை இட்டுச் செல்லவல்ல நல்லவர்; வல்லவர். இவர் நீடு நிறை வாழ்வு பெற நிலா வேணியன் நீழலை இறைஞ்சுவோமாக

-சி. வேலாயுதம்.

### வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர்

எட்டு ஆண்டுகள் எமது கல்லூரியில் ஆசிரியர்களையும், மாணவர்களையும் தன்பால் ஈர்த்து வைத்திருந்த பெருமைக்குரியவர் எமது முன்னாள் அதிபர் திரு. சி. சிவசரவணபவன். எச் சொல் விளம்பினும் இனியவையாகவே இருக்கும் வண்ணம் தானும் இன்புற்று மற்றவரையும் இன்புறச் செய்பவர் எழுத்துலகில் தனக்கென ஓர் சிறப்பிடத்தை வகித்த அவர் அப்புகழைக் கல்லூரிக்கும் தேடித் தந்தவர். எதிலும் புதுமையை விரும்பும் அவர் பாடசாலை நிர்வாகத்திலும் பல புதுமைகளைப் படைக்க விரும்பியவர்.

''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்'' என்ற வள்ளுவரின் வாக்கியத்திற்கொப்ப அவரது செயல்கள் சான்றாகும். அவரது சேவையைக் கல்லூரி போற்றுவதோடு, அவர் ஓய்வு பெறுவதை முன்விட்டு அவரைப் பல்லாண்டு மேலும் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்தி விடைபெறுகின்றேன்

- து. சந்தோசம்.

### அன்னை துர்க்கா துரந்தரி

எழுத்தாளர் வரிசையில் இணையற்றவராக விளங்கிய திரு. சரவணபவன் அவர்கள், மூன்று தலை சிறந்த கல்லூரி அதிபராகப் பணி புரிந்து ஓய்வு பெறுகிறார். ''சிற்பி'' என்னும் புனைபெயரைப் பொருத்தமாகத் தனதாக்கிக் கொண்ட இப்பெரியாரின் பாராட்டத்தக்க பணிகள் பலவற்றை நான் நன்கு அறிவேன். கால் நூற்றாண்டுக்கு மேலாக இவருடைய கல்விப் பணியை நான் மதித்துப் பாராட்டிய சம்பவங்கள் பல உண்டு. அறிவையும், ஆன்மீகத்தையும் மனிதாபிமான நோக்குடன் இணைத்துக் காண்பவர் இவர். வாக்குத் திறனும், செயல் திறனும் பெரிதும் வாய்க்கப் பெற்றவர்.

ஓய்வு பெற்ற பின்பும் உள்ளம் ஓயாது மனித சமூகத்துக்கு ஆற்றவேண்டிய பணிகளை நிறைவேற்றி வைப்பார் என்ற நம்பிக்கை நமக்குண்டு. சேவை செய்வதற்கு ஏற்ற சிரிப்பும், சாந்தமும் சிற்பி அவர்களிடம் நிரம்ப இருப்பதால் எதிர்காலப் பணி மேலும் ஒளியூட்டும் என்பதைக் கூறி வாழ்த்தி அமைகிறேன்.

- தங்கம்மா அப்பாக்குட்டி.

## எழுதுவது போலவே வாழ்ந்து சமூகப் புரட்சி செய்தவர் சிற்பி

ஈழத்து இலக்கியத்தில் கலைச்செல்விக் காலம் என்றொரு பொற்காலமிருந்தது. அதன் பிதாமகர் சிவசரவண



வையகம் வாழ்த்திட வாழ்க நீடு பல்லாண்டு!

யாழ். வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியினதும், வண். தெற்கு கொத்தணியினதும் அதிபராக இருந்து ஓய்வுபெறும்

**திரு. சி. சிவசரவணபவன்**

(M A., Dip-in-Edu., S L. E. A. S.)

பவன் என்ற சிற்பிய வார். ஈழத்தின் தமிழிலக்கியதிற்குப் பெருமை சேர்த்த முன்னோடி அவர். ஆக்கவிலக்கிய கர்த்தாவான அவர் பொதுவாக அமைதியானவர், ஆனால் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் போர்க்குணங் கொண்டவர். இடதுசாரிகளுடன் தம்மை இணைத்துக் கொள்ளாத எழுத்தாளரின் தனித்துவத்தையும் அவர் தம் திறனையும் வெளியுலகிற்கே எடுத்துரைத்தவர். ஈழத்தில் மட்டுமன்றி, தமிழகத்திலும் ஈழத்து எழுத்தாளரின் ஆக்கங்களைப் பரப்பியவர் அவர் ஆசிரியராக இருந்து நடத்திய ''கலைச்செல்வி'' ஈழத்து எழுத்துக்கும், இலக்கிய சொல்நெறிக்கும் ஆக்கந்தந்தது. அவர் தொகுத்து தமிழகத்தில் வெளியிட்ட ''ஈழத்துச் சிறுகதைகள்'', நம்மவர் பெருமையையும் ஆற்றலையும் தமிழகம் உணர வைத்தது.

எழுதுவது போல வாழ்ந்து காட்டுபவர் எத்தனை பேர்? சிற்பி அவர்கள் தம் எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் எத்தகைய சமூகச் சீர்திருத்தங்களையும் முற்போக்குக் கருத்துகளையும் முன் வைத்

-செங்கை ஆழியான்

தாரோ அவற்றைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து வருபவர். எழுத்திலும், வாழ்க்கையிலும் சமூகப் புரட்சி செய்தவர் சிற்பி அவர்கள். அவரின் எழுத்துக்களில் ஆற்றொழுக்கான எழுத்து நடையும் வலிமையான சமூகச் செய்தியும் இருக்கும். படித்து முடிந்ததும் ஓர் உணர்ச்சி எஞ்சி நிற்கும்.

ஈழத்து இலக்கிய உலகிற்கு என்னைப் போன்ற பலரை உருவாக்கி உலா வரவிட்டவர் அவரே. ★

## கொத்தணி உதவியாளர் பார்வையில் சிற்பி ஐயா....

எஸ். கே. சண்முகலிங்கம்

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டத்தில் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியினை மூலதாரப் பாடசாலையாகக் கொண்டு, வண்ணார் பண்ணை தெற்குக்கொத்தணி அமைப்பு என்று ஒன்று இன்று இயங்குகிறதென்றால், அதற்குக்காரணம் எமது முன்னாள் அதிபர் சிவசரவணபவன் — சிற்பி ஐயா அவர்களே!

ஆறுபாடசாலைகளைக் கொண்ட ஓர் புதிய கொத்தணியமைப்பில் மூலதாரப் பாடசாலையாக இயங்கும் பெருமையை இப்பாடசாலைக்கு பெற்றுக் கொடுத்தது சிற்பிஜயா அவர்களின் தகுதி, திறமை, ஆளுமை என்று கூறின் மிகையாகாது.

வண் தெற்கு கொத்தணி அமைப்பு அங்கீகரிக்கப்பட்டதும் கொத்தணி உதவியாளராக அதிபரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமரர் ''கந்தையா ரவீந்திரன்'' நெருக்கடி காலத்திலே துயருற்ற மக்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கும்போது ''பொம்மர்'' குண்டுவீச்சிற்கு இலக்காகி அகால மரணமடைந்தார். பின்னர் பா. விஜயகுமார் உதவியாளரானார். அவர்பதவி உயர்வுபெற அக்கடமையை நான் பொறுப்பேற்க வேண்டி ஏற்பட்டது.

பாரிய பிரச்சினைகளைக் கூட சீறாது, சினக்காது, அமைதியாக, செம்மையாக அதிகாரத்தனம் காட்டாது, மானிடநேயத் தொடர்பு மூலம் தீர்த்துவைக்கும் சாதுரியம் அவருக்கு கைவந்தகலை பெருங்கோபத்துடன் வருப

(6 ஆம் பக்கம் பார்க்க)

மிகக் குறுகிய காலத்துள் வாழ்த்துச் செய்திகளும், ஆக்கங்களும் தந்த பெரியோருக்கும் —

மனவிருப்புடன் விளம்பரம் நல்கியோருக்கும்,

நன்றிகள் பல.

.செயலாளர்

ஆசிரியர்-
நலன்புரிச் சங்கம்.

கற்பனையாம் கல்லெடுத்துச்
சிந்தனையில் எழுத்துச்
சிலை வடிக்கும் சிற்பி தான்
சிவ சரவணபவன் - அது
மட்டுமா?

'கல்' என்று தம் மாணவரை
வல்லவராய் நல்லவராய்
வாழும் திறம் அறிந்தவராய்
உரு வடித்திட்ட சிற்பியுமவனே

- ''மில்க்வைற்''.

தன்னலமற்ற சேவை
செய்வதில்

எம்மை ஊக்குவித்த-
ஓய்வுபெற்ற அதிபர் தாள்
பணிகிறோம்

-யாழ்
வைத்தீஸ்வராக் கல்லூரியின்

✶ சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ்முதலுதவிப்படை

✶ செஞ்சிலுவைச் சங்க அணியினர்.

எனது நிறைகுட ஆசான்
திரு சி சிவசரவணபவன்
(சிற்பி ஐயா)

என்றென்றும் நீடூழி வாழ
வாழ்த்துகின்றேன்.

மாணவன்: திரு. உதயன்

எம் அன்பு ஆசானை
நெஞ்சார வாழ்த்துகிறேன்

- வி. தயாபாலன்

புங்குடுதீவு-நயினாதீவு
பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்

ERIC GANESH
(OPTICIANS)
566, Hospital Road, Jaffna.

வாழ்வுக்கு வாழிகாட்டும்
தொழில் நுட்பப் பயிற்சிகளுக்கு
JAFFNA TECHNICAL
INSTITUTE
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக
கல்லூரி
C. C. A.
(வெலிங்டன் சந்திக்கு அருகில்)
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

மகாராணி
றெக்ஸ்ரைல்ஸ்
50, பெரியகடை, யாழ்ப்பாணம்.

கலாலயா
(தொழில் பயிற்சி நிலையம்)
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

நியூ கிறீம் ஹவுஸ்
75, காங்கேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

திருப்பதி ஸ்ரோர்ஸ்
51, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

விலாசம் இல: இ/6220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாலை மரங்கள் 5 அங். x 3 அங். நீராந்தி 15 அடி நீளம் — 15, 2 அங் x 2 அங். நீராந்தி 10 அடி நீளம் — 20. தொடர்பு கொள்ளவும்! இல. 9A, விதானையார் வீதி, சுண்டிக்குளி. (25996)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உடன் விடை கிடைக்கும். ஜாதகம், குறிப்பு கைரேகை, எண்சோதிடம் அனைத்துக்கும் தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (25952)

## பெயர் மாற்றம்

யாழ்.நகரைவதிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam. 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25587)

## மணமகன் தேவை

வயது 36, பரணி நட்சத்திரம், சிங்கலக்கினம், 7இல் செவ்வாய், இரகபாவம் 39/16 உள்ள கொழும்பில் அரச கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. கொழும்பில் குறைந்த வாடகையில் வதிவிட வசதியும் உண்டு. இல. 907, மே/பா, உதயன், (6236)

## ENGLISH

English Grammar for G. A. Q. (E S L), Spoken Engiish G. C.E. (O/L), விரிவான விளக்கத்துடன் ஆங்கிலம் தனிப்பட்ட முறையிலும், பொதுவாகவும் கற்பிக்கப்படுகிறது. Mr. R. Sivaligam (Dip – in – English) புதிய ஆங்கிலக் கல்வி நிலையம், ஆரியகுளம், யாழ்ப்பாணம். (சி 4799)

## OLIVETTI

புதிய தட்டச்சு இயந்திரங்கள் (ஆங்கிலம்) விற்பனைக்கு உண்டு. 12 மாதகாலம் விற்பனைக்கு பிந்திய சேவை இலவசம், ஒரு வருட உத்தரவாதம் வழங்கப்படும். விற்பனை நிலையத்தில் பார்வையிடலாம். கலக்சி, புகைப்பட சேவை, இல. 337/1, 1ஆம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி 4785)

## பாரதிதாசன்

கல்வி நிறுவனம்

[BECON]

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**G.A.Q. 93 Aug**

பேராதனை

மீட்டல் வினா விடை வகுப்பு

பொருளியல்

**S. வரதராஜன்**
B A (Hons)

ஆரம்பம்:
07 — 06 — 1993
(இன்று) 3.00 p.m

G.A Q 94 / B A 94 ] பேராதனை

பொருளியல் வகுப்புகள் நடைபெறுகின்றன

(சி-4798)

## தேவை

சிறு தொழில் சம்பளத்துடன் பழகக்கூடிய இளைஞர்கள் தேவை. தொடர்பு: கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (25965)

நல்ல தரமான பாவித்த ஓடியோ கசற் பீஸ்கள் வாங்கப்படும். ஸ்கைறோஸ், இல. 1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (25995)

## நிலையியல்

நிலையியல் பகுதி 1, காவியும் அதன் பிரயோகங்களும், மாதிரி வினாத்தாள்களும் விடைகளும், பிரயோககணிதம் ஆகிய நூல்கள் தமிழீழத்தின் முன்னணிப் புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன. ஆசிரியர் சி துரையப்பா B Sc.(Maths), M Sc.(Agric), MAES (Sri-Lanka). (6232)

## வகுப்புகள்

City and Guilds of London Institute, 627 Quantity Surveying – Part - I வகுப்புக்கள் 07-06 93 இல் ஆரம்பமாகி திங்கள் புதன் கிழமைகளில் காலை 6-30 — 8-30க்கு நடைபெறும். து. விசாகபதி, பாடசாலை ஒழுங்கை, தாவடி. [25942]

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னையின் விழியில்: | அறியாய வழியில்: |
|---|---|
| 12 — 08 — 1956 | 17 — 05 — 1984 |

அமரர்
**தம்பிராசா தெய்வேந்திரம் (குட்டி)**

திதி: 07 — 06 — 1993

எம்மைப் பிரிந்து ஆண்டு ஒன்பதின் பிரிவன்று காலம் ஓடிப் போனாலும். அது நூறாய் போனாலும் உங்கள் எண்ணக் கூண்டுக்குள்ளே எம் வாழ்வு பெருமை கூட்டும்.

ஆகாயக் கோட்டையெல்லாம் அரை நொடியில் சாய்ந்தது என்ன; ஆனந்தம் எல்லாம் அவலமாய்ப் போனதென்ன; அன்புடனும், பண்புடனும் எம்மை வளர்த்து ஆளாக்கு முன்னர் சதிகாரன் உன்னை அழித்து விட்டான். நீ எம்மை விட்டுப் போனாலும், உன் மலர்ந்த முகமும், மகிழவைக்கும் சொல்லழகும் மனதைவிட்டுப் போகாது. உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர், நண்பர்கள்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

[6228]

# ஈராண்டு நினைவஞ்சலி




| தாயின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 24 — 06 — 1974 | 30 — 05 — 1991 |

**அமரர் நவரத்தினம் மதியழகன்**
(யாழ்ற்றன் கல்லூரி, க. பொ. த (சா/த) மாணவன்)

திதி: 07 - 06 - 1993

ஆண்டுகள் இரண்டு சென்றும்
எங்கள் கண்ணீர் ஆறவில்லை
மூண்டெழும் துன்பம் உந்தன் பிரிவு
மூட்டிய துயரம் ஐயா!
மீண்டிங்கு வருவாய் என்றே நாமும்
விழிமூடித் தூங்கவில்லை
'மாண்ட' எம் மகனே மதியின் அழகா
மலர்ந்தே நீ துயில்வாய்!

- குடும்பத்தினர்.

இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். [illegible] காரைநகர்.
(25943)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாய் ராம்

# FIRST ANNIVERSARY REMEMBRANCE



**Sivaguru Mahadevan**
(B Sc. C Eng. M I C E Chartered Civil Engineer Bridges and Highways U. K.)

BIRTH: 20 – 03 – 1947 DEATH: 05 – 06 – 1992

THITHI: 26 – 05 – 1993

"The Body is a House given for Rent. The god is the owner. The duration of life is under the control of him who gave life to the Body" says Bagawan.

Sai Ram

Fondly Remembered by;
Wife, Daughter and Sons (U. K.),
Mother (Sri Lanka),
Mother - in - law (U. K.),
Sisters (U K and Sri Lanka),
Brothers (Hongkong and Sri Lanka),
Brother - in - laws (U S. A., Canada, Maldives, Sri Lanka),
Sister in - laws (U S. A., Canada, Maldives, Sri Lanka),
Nephews and Nieces (U. S. A., U. K., Sri Lanka, Hongkong, Maldives).

Chundikuli-
Bagawan Sri Sathya
Sai Bajan Mandali,
18/2 Kachcheri East Lane,
Chundikuli.

(25993)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணுலகில்: | விண்ணுலகில்: |
|---|---|
| 10 — 05 — 1905 | 08 — 05 — 1993 |

**அமரர் நாகமுத்து குமாரசாமி**

ஐயா! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்ற போதிலும், உங்களது நினைவலைகள் எம்மைவிட்டு நீங்காது நிலைத்திருக்கும்.

என்றும் உங்களை மறவாத;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

67, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(25982)

## உதயன்

### கலங்கித் தெளியட்டும்

தலையிடியும் தனக்குத் தனக்கு வந்தால் தான் அதன் வேதனை அவரவருக்கு தெரியும். சிங்கள அரசியல் வாதிகளுக்கும் மாகாண சபை விவகாரத்தில் தலையிடி உண்டாகி இருக்கும் போது தான் அதன் தன்மை விளங்குகிறது.

தென்னிலங்கை அரசியல் வாதிகளில், குறிப்பாக ஆளுங் கட்சி அரசியல்வாதிகளில், தனக்குச் சரியெனப்பட்டதை துணிச்சலோடு வெளியே சொல்லும் திறந்த மனக்காரர் உதவி சபாநாயகர் காமினி பொன்சேகா.

சிங்களப் பிரதேசங்களிலேயே, பெரும்பான்மை பெற்ற மாகாண சபைகளிலேயே அரசு முறைகேடாக நடந்து கொள்கிறதென்றால், தமிழ் மக்கள் மாகாண சபை முறையில் திருப்தி கொள்ளாமல் இருப்பது நியாயமானதே என்று அவர் ஒழிவு மறைவின்றி வெளியே எடுத்துக் கூறியுள்ளார்!

உண்மையான நிலையை காமினி பொன்சேகா வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார். இதுவரையில் இந்த உண்மையை அறிந்திராத சிங்கள அரசியல் வாதிகளும் சிங்கள மக்களும் மட்டுமன்றி, தமிழர்களிடையே உள்ள ஒரு சில அடிமைப் புத்தி உள்ளவர்களும் அவர் போட்டுக் காட்டும் வெளிச்சத்தில் உண்மையைத் தரிசிக்க முன்வர வேண்டும். தயங்கக் கூடாது.

மாகாண சபைச் சட்டம் இயற்றப்பட்டு அதன் உள்ளுடல் தெரியவந்தபோதே, தமது மக்களின் நலனில் உண்மையான அக்கறை உள்ள தமிழர்கள், புத்திக் கூர்மை உள்ள தமிழர்கள் இந்தச் சபைகள் தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றாது என்று தெரிவித்தார்கள்.

சகல துறைகளிலும்— பாதுகாப்பு, காணி, அபிவிருத்தி, காணிப்பங்கீடு, கல்வி, சுகாதாரம், கைத்தொழில், விவசாயம், மீன்பிடி, சமூக சேவை, வர்த்தகம், நீதி நிர்வாகம், போக்குவரத்து என்று— எல்லாத்துறைகளிலுமே நாணயக் கயிறு கொழும்பு அரசின் கையிலேயே கொடுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி செயல் வடிவம் கொடுத்த ஒரு விடயத்தை முறியடிக்கும் விதத்தில், ஒதுக்கிவிட்டுத் தான் கொண்டு வரும் திட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரம் கொழும்பு அரசுக்கு உண்டு. தனியார் போக்குவரத்து வாகனங்கள் விடயத்தில் கொழும்பு அரசின் அதிகாரம் எப்படி மேலோங்கி நின்றது என்பதை இலகுவில் மறந்துவிடமுடியுமா? இதற்குப் பெயர்தான் அதிகாரப் பரவலாம்!

கடந்த ஐந்து ஆண்டு காலமாக தெற்கின் ஏழு மாகாண சபைகளையும் கொழும்பில் ஆட்சி செலுத்தும் ஆளும் கட்சியே நிர்வகித்து வந்ததால் மாகாண சபைகளின் குறைபாடுகளும், வலுவின்மையும் வெளியே தெரியாமல் மறைக்கப்பட்டு விட்டன.

ஆனால் இனிமேல் அது கஷ்டம். எதிர்க்கட்சிகளும் மாகாண சபைகளின் நிர்வாகத்தைக் கைப்பற்றியுள்ளதால் அதிகாரம் கொழும்பு அரசிடம் அதிகமாக உண்டா, மாகாண சபைகளிடம் உண்டா என்பது இலகுவில் தெரியவந்துவிடும்! தென்னிலங்கை அரசியல்வாதிகளே மாகாண சபையின் அதிகாரம் குறித்து மல்லுக்கட்டப் போகிறார்கள்! குழப்பப் போகிறார்கள்!

அதன் ஆரம்பமே முதல் மந்திரிகள் நியமனக் குழறுபடியும், மேல் மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கும் சிக்கலும்! அவர்களே கலங்கித் தெளியட்டும்! மாகாண சபைகளின் இயலாமை அப்பட்டமாகத் தெரியவரட்டும்!

---

## மட்டு. வீச்சுக் கல்முனையில் அகதி முகாம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

மட்டக்களப்பு வீச்சுக் கல்முனை புனித அன்னமாள் தேவாலயத்தில் அமைந்திருக்கும் அகதிமுகாம் இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் அண்மையில் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயித்தியமலை, பெரிய புல்லுமலை பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 150 குடும்பங்கள் இந்த முகாமில் தங்கியிருந்ததாகவும் —

தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த மாணவன் ஒருவன் மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தை யடுத்து அகதிகள் மத்தியில் பீதி நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## இந்திய உப ஜனாதிபதியின் இலங்கை விஜயம் ரத்து

கொழும்பு, ஜூன் 7

இந்திய உப ஜனாதிபதி கே. ஆர். நாராயணனின் இலங்கை விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

திரு. பிரேமதாஸா உயிருடன் இருந்த போது தமது பிறந்த தினமான ஜூன் 23 ஆம் திகதி அன்று ''கம் உதாவ'' நிகழ்ச்சியை கோலாகலமாகக் கொண்டாட இருந்தார்

அவரின் மறைவின் பின்னர் அக்கொண்டாட்டத்தை புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ரத்துச் செய்து விட்டார் என்பதும் —

அதனால் அக் கொண்டாடத்தில் கலந்து கொள்வதற்காக உப ஜனாதிபதி நாராயணன் இலங்கைக்கு வரவிருந்தார் என்பதும் தெரிந்தவையே. (ஒ எ)

## புற்றுநோய்க்கு மருந்து

டோக்கியோ, ஜூன் 7

ஜப்பானில் புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது அது பரிசோதனை செய்யப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது. இதற்கு 35 கோடி அமெரிக்க டொலர்கள் செலவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-6)

## தங்கப்பாளங்கள் கடத்திய எகிப்திய இராஜதந்திரி!

### கட்டுநாயக்காவில் பிடிபட்டார்

கொழும்பு, ஜூன் 7

இலங்கைக்குள் தங்கப் பாளங்களைக் கடத்தி வர முயற்சித்ததாகக் கூறப்படும் எகிப்திய இராஜதந்திரி ஒருவர் நேற்று முன்தினம் கட்டுநாயக்காவில் பிடிபட்டார்.

தங்கப்பாளங்கள் பயணப்பை ஒன்றின் அடிப்பாகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட தங்கப் பாளங்களின் பெறுமதி இலங்கை நாணயத்தில் சுமார் 88 லட்சம் ரூபா (2 லட்சத்து 19 ஆயிரம் டொலர்) என்று சுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

பிரஸ்தாப இராஜதந்திரி விமான நிலையத்தில் இருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்பட்ட போதிலும், விசாரணைகளில் குற்றவாளி எனக் காணப்பட்டால்—

இவரை மீள அழைத்துக் கொள்ளுமாறு எகிப்திய அரசாங்கம் கேட்டுக்கொள்ளப்பட இருக்கிறது என்று வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-6)

### தென் பகுதிக் கடலில்

## இரண்டு இந்தியக் கப்பல்கள் நேருக்கு நேர் மோதின!

தெவிநுவரையில் இருந்து பதினைந்து மைல் தொலைவில் தென்பகுதிக் கடலில் இரண்டு இந்திய சரக்குக் கப்பல்கள் மோதிக்கொண்டன என்று அறிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் எம். வி. ரவிதாஸ் என்ற கப்பலில் இருந்த 46 பேரில் முப்பத்தொரு பேர் மீட்கப்பட்டனர். அவர்களில் இருவர் பெண்கள், ஒரு குழந்தையும் அடங்கும்.

அக் கப்பலை இழுத்துக் கொண்டு வர கொழும்பில் இருந்து இழுவைக் கப்பல் ஒன்றும் மீட்புக் குழுவும் அனுப்பப்பட்டன.

மற்ற கப்பலான ரத்னதீப் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு, அதில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (த-எ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். பல்கலைக்கழகம் ''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தி வரும் இரண்டாவது வருட கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ மாலை 3.45 மணி:- பற்றிஷியன் அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் அணி.

★ மாலை 4.45 மணி:- யாழ். பல்கலைக்கழக அணி எதிர் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி.

o o o

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்க[illegible] டாவில் குமரன் [illegible] மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ மாலை 3.30 மணி:- குப்பிளான் அறிவொளி அணி எதிர் உரும்பராய் ஒஸ்கா அணி.

★ மாலை 4.30 மணி: ஊரெழு றோயல் ''ஏ'' அணி எதிர் யாழ். பாரதி அணி.

o o o

அரியாலை சனசமூக நிலைய 44 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் வலைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4 மணிக்கு சனசமூக நிலைய மைதானத்தில் [illegible] அரியாலை [illegible] எதிர்த்து சென்-அன்ரனீஸ் வி.க அணி மோதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். ஆஸ்பத்திரியில்

## கடந்த மாதத்தில் மட்டும் 30 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவில் கடந்த மே மாத காலத்தில் மட்டும் 29 ஆயிரத்து 75 பேர் பல்வேறு நோய்களுக்காகச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரி பதிவேடுகளில் இருந்து இந்த விவரம் தெரிய வருகிறது

இந்த ஆண்டில் கடந்த மே மாதத்தில் தான் வெளிநோயாளர் பிரிவில் ஆகக் கூடிய நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் —

ஆஸ்பத்திரி வார்டுகளில் கடந்த மாதம் மொத்தம் 5 ஆயிரத்து 176 பேர் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இந்த ஆண்டின் கடந்த 5 மாதங்களில் இது மிக அதிகம் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

வார்டுகளில் தங்கிச் சிகிச்சை பெற்றவர்களில் பலர் நெருப்புக் காய்ச்சல் உட்பட பல்வேறு வகைக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. (த-5-17)

---

### மைதானத்தில் உயிரிழந்த ஆசிரியரின்

## மரண ஊர்வல வேளையில் விளையாட்டுப் போட்டியா?

### தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

''அண்மையில் நடைபெற்ற பண்டத்தரிப்பு கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தனது பாடசாலை மாணவரை அழைத்துச் சென்றபின், மைதானத்தில் மாரடைப்புக் காரணமாக உயிரைத் தியாகம் செய்த — சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலையின் ஆசிரியர் — லெட்சுமணசாமிக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அஞ்சலி செலுத்துகிறது''.

— இவ்வாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மறைந்த ஆசிரியரின் கடமையுணர்வை மதியாது, விளையாட்டுப் போட்டியை தொடர்ந்து நடத்தியமையையும், அந்த ஆசிரியரின் மரண ஊர்வலம் நடக்கும் அதே சமயத்தில் மைதானத்தில் மேளங்கள், தாளங்கள் போட்டு மலர் மாலை அணிவித்து கல்விப் பணிப்பாளரை, பிரதிக் கல்விப் பணிப்பாளரை, உதவிக் கல்விப் பணிப்பாளர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றமையையும் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இறுதிச் சடங்கு நடந்த அதே சமயத்தில், போட்டியை நடத்தியமையினால் பல அதிபர்கள், ஆசிரியர்கள் கூட இவ்வாசிரியரின் மரண ஊர்வலத்தில் கலந்துகொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக பணிப்பாளருக்கு சங்கத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில், இவ்வாசிரியர் கடமையின் போது உயிரிழந்தபடியால் பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 346 இன் அடிப்படையில் அவரின் 5 வருடச் சம்பளத்தை நஷ்ட ஈடாகக் கொடுக்கும்படி சங்கம் கோரியுள்ளது. — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## தமிழர் கலை, பண்பாட்டுடன் இணைந்ததுசித்தமருத்துவம்

### சுகவாழ்வு கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 2

தமிழர்களின் நாகரிகம், கலை, பண்பாடு ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்தது தமிழ் மருத்துவம். தமிழ் நாட்டின் சித்தர்களால் உருவாக்கப்பட்ட இந்த வைத்திய முறை தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் தமிழ் மருத்துவமே சித்த மருத்துவம் என்றும் அழைக்கப்படுகின்றது.

யாழ். பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகு நடத்தும் சுகவாழ்வு கருத்தரங்குத் தொடரில் கலந்து கொண்டு பேசுகையில் யாழ். மாநகராட்சி மன்ற சித்த வைத்தியப் பகுதி பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் பி. இராமநாதன் இவ்வாறு கூறினார்.

யாழ். பல்கலைக் கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது:

தமிழ் மருத்துவ சிகிச்சை முறைகள் கடினமானவை எனப் பரவலாக ஒரு கருத்து நிலவுகின்றது. ஆனால் இது தவறாகும். உரிய முறைகளைக் கையாண்டால் சுலபமாக நோய்களைக் கட்டுப்படுத்திநிறைவான வாழ்வைத் தரக் கூடியது தமிழ் மருத்துவமாகும்.

நோய்கள் அணுகாமல் சுகமாக வாழ சித்தர்கள் காய கற்ப முறையை அறிமுகம் செய்தனர்.

காய கற்பத்தை, காயம்— உடம்பு. கற்பம்—அழியாமை என்று இரண்டு பிரிவாக சித்தர்கள் பிரிக்கின்றனர். மருந்துகள் இல்லாமல் பிரணாயாமம், யோகாசனம் போன்ற காய கற்ப பயிற்சிகளால் உடலைப் பாதுகாத்தல் ஒரு வகையாகவும்—

மூலிகைகளால் உடலைப் பாதுகாப்பது மற்றொரு வகையாகவும் கருதப்படுகின்றது.

சாதாரணமாக எமக்குக் கிடைக்கக் கூடிய பல மூலிகைகள் நோய் தீர்க்கும் காரணிகளாகத் திகழ்கின்றன.

நெல்லி, வல்லாரை போன்றவை நீண்ட ஆயுளுக்கும், மூளை விருத்திக்கும் சிறந்தன. உடற்சூட்டையும் இவை தணிக்கும். ஆடாதோடை மற்றும் தூதுவளை சுவாசத்தில் ஏற்படும் கோளாறைப் போக்குகின்றன. இஞ்சி வயிற்றிலுள்ள வாயுவை அகற்றி உணவை சமிபாடடையச் செய்யும்.

துளசி சுற்றுப்புறம் மாசடாமல் தடுக்கின்றது. கற்பூர வள்ளி சுவாசத்தில் ஏற்படும் சளியை வெளியேற்றும். (த-111)

---

### சமாதான..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படைவாதப் போக்குகளை எதிர்த்துப் பல்லாண்டுகளாகப் போராடி வருகிறார். பம்பாயில் உள்ள இஸ்லாமிய ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் இயக்குநராகப் பணியாற்றுகிறார்.

மலேசிய ஆயர் மேதகு. செல்வநாயகம் மாதகலைச் சேர்ந்தவர். யாழ். மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்தவர். (அ-3)

---

### அமைதிப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடப்பதாகவே தென்படுகிறது. ஆனால் வெளிநாட்டிலிருந்து அமைதிப் படை ஒன்றைக் கொண்டு வந்து இலங்கை மக்களை அடக்கும் முயற்சியை நாம் முழுமையாக ஆட்சேபிக்கிறோம்.— இவ்வாறு அவர் கூறினார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பவானி கருணாகரன்

டாக்டர் சுப்பிரமணியம் வீதி சுன்னாகம் ''இராச பவனம்'' த்தைச் சேர்ந்த திருமதி பவானி கருணாகரன் அவர்கள் 06 - 06 - 1993 ஞாயிறு காலமானார்.

இவர் இ. கருணாகரன் (ஆசிரியர், ஸ்கந்தவரோதயா கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், செல்வி சங்கீதா (மாணவி, நாகேஸ்வரி வித்தியாசாலை) அவர்களின் அன்புத் தாயாரும், டாக்டர் ஆ. நடராசா (ஆயுள்வேத வைத்தியர்), காலஞ் சென்ற நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மகளும், திரு. ந. கிருஷ்ணராசா (ஆயுள்வேத வைத்தியர்), திரு. ந சந்திரராசா (பொறியலாளர், லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்), திரு. ந. மோகனராசா (பல்வைத்தியர், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சம்பூர்ணராணி கிருஷ்ணராஜா, விமலேஸ்வரி சந்திரராசா, குகனேஸ்வரி மோகனராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், மகிந்தன், கஜந்தன், அமுதா, கஜமோகன், லதா, சயந்தன், தனுசாந்தன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள், இன்று திங்கள் (07 - 06 - 93) பி ப. 2.00 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
இ. கருணாகரன்

(26004)

## திருமதி கந்தையா சீதேவிப்பிள்ளை

காரைநகர் கோவளத்தைச் சேர்ந்த கந்தையா சீதேவிப்பிள்ளை 05-06 93 இல் காரைநகரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விஜயலக்ஸ்மி, கோகிலம்மா, காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராஜா (யாழ்ப்பாணம்), கோபாலபிள்ளை (கௌரி மில் பரந்தன்), அன்னபூரணம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவசோதி (சாவகச்சேரி), சத்தியகுமார் (கொழும்பு பல்கலைக் கழக சட்டபீட மாணவன்), கிருஷ்ணகுமாரி, பாஸ்கரன் (லண்டன்), சத்தியநாதன் (யாழ். பல்கலைக் கழகம் விவசாயபீடம், கிளிநொச்சி) ஆகியோரின் பேத்தியும், சொர்ணாம்பிகை (காரைநகர் ப. நோ. கூ. சங்கம்) பொன்னம்பலம் (லண்டன்) ஆகியோரின் பேத்தியும், ஜெயசுதன், ஞானசுதன், விஜிதா, சாரதா, வனிதா, அம்பிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் காரைநகரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.
ச. சத்தியநாதன் (பேரன்)

(26005)

செல்வன்
## விசாகப்பெருமான் வாமதேவன்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுன்னாகத்தில் வசித்தவருமாகிய வாமதேவன் மரணமானார்.

இவர் காலஞ்சென்ற விசாகப்பெருமான் தம்பதிகளின் அன்பு மகனும், இந்திரை, கௌரி, ரவீந்திரன் (லண்டன்), பாலகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரரும், டாக்டர் சுந்தரலிங்கம், கருணாநிதி (தபாலதிபர், கொட்டாஞ்சேனை), ரஜனி, கலைமகள் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இறுதிக் கிரியை இன்று பிற்பகல் 1.00 மணியளவில் சுன்னாகம் சிவன் கோவிலடி இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி கருணாநிதி
சிவன் கோவிலடி, சுன்னாகம்.

(26012)

## வேதவனம் கந்தர் சண்முகம்

(முன்னாள் பிரபல வர்த்தகர், தயாபரன் ஸ்ரோர்ஸ் பரந்தன் V, K சண்முகம்)

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாய் உடுவில் றோட் பொன்னம்பலம் வேலணை வசிப்பிடமாக கொண்டவருமாகிய வேதவனம் கந்தர் சண்முகம் 6 - 6 - 93 (நேற்று) காலமாகி விட்டார். அன்னார் சண்முகம் இலட்சுமியின் அன்புக் கணவரும், கந்தசாமி (கிளிநொச்சி), மங்கையர்க்கரசி சர்வலோகதயாபரன் (ஜேர்மன்), தவலிங்கம் (கண்டி வர்த்தகர்), மலர் (பிரான்ஸ்), ராணி (கண்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்தி (ஜேர்மன்), பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மாமனாரும், நிரோஷனின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிதம்பரம், வள்ளியம்மை, சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஆ. ச சங்கரப்பிள்ளையின் (A. S. Sangarapillai & Co) அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 7 - 6 - 93 பி. ப. 2.30 மணியளவில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
ச இலட்சுமி (மனைவி)
சி இராசையா, பொன்னம்பலம் வீதி, உடுவில் றோட், மானிப்பாய்.

(26010)

## வெளிநாட்டு சமாதானக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று யாழ்ப்பாணம் வந்து சேரும் சமாதானக் குழுவுக்கு தாய்லாந்தைச் சேர்ந்த பௌத்த குருவான வண. சோமாச்லைச குசலி ரிற்றோ தலைமை வகிப்பார்.

பிலிப்பீன்ஸ் ஆயர் மேதகு ஜுவாஸ் டி. டொயஸ், மலேசிய ஆயர் மேதகு செல்வநாயகம். பிலிப்பீன்ஸைச் சேர்ந்த வண. இரசியோ கோர்ட்ஸ் கியோ, வட இந்திய பேராசிரியர் அஸ்கர் அலி எஞ்சினியர், புரூணையைச் சேர்ந்த கரோலின்ஸ் பயஸ் ஆகியோர் சமாதான தூதுக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

கொழும்பைச் சேர்ந்த பௌத்த, கிறிஸ்தவ மதகுருமார்கள் சிலரும் சமாதானக் குழுவினருடன் சேர்ந்து வருவர் என்று நம்பப்படுகிறது.

இக்குழுவினர் இம்மாதம் முதலாம் திகதி கொழும்பு வந்து சேர்ந்தனர். அங்கு அரசாங்கப் பிரமுகர்கள், மற்றும் அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசினர்.

இக்குழுவினர் ஒருவார காலம் யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் போது விடுதலைப் புலிகளின் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசுவர்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து அப்போது அவர்கள் விரிவாக ஆராய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே வேளை புனர்நிர்மாண, புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசுசார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், மதத் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவர். சமாதானத்துக்கு ஊக்கமளிக்குமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்வர்.

சமாதனத் தூதுக் குழுவினர் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக எந்தவித தீர்வு ஆலோசனையையும் தம்முடன் கொண்டு வரவில்லை என்றும் அறிய வந்துள்ளது.

பிலிப்பீன்ஸ் நாட்டில் அரசாங்கமும், போராளிகள் குழுக்களும் சமாதானப் பேச்சு நடத்துவதற்காக ஓரிடம் சமாதானப் பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இங்கு வரும் சமாதானக் குழுவில் அங்கம் வகிக்கும் அறுவரும், ஏப்ரல் மாதத்தில் ஹொங்கொங்கில் நடந்த கருத்தரங்கின் பின்னர் மேற்குறிப்பிட்ட சமாதானப் பிரதேசத்தின் செயற்பாடுகளைச் சென்று பார்வையிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதே போன்ற சமாதானப் பிரதேசம் ஒன்றை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஓரிடத்தில் அமைக்கும் முயற்சியிலேயே மேற்படி குழுவினர் ஈடுபடுவர் என எதிர்பார்க்கப் படுகிறது. [அ-உ-3]

## கொத்தணி...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் கூட அவர் முன் பெட்டிப் பாம்பாகி விடுவர்.

ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபர் நீடுழி வாழ எம் வைத்தீஸ்வரன் அருள் பாலிப்பார் என்பதில் ஐயமில்லை.

## வடக்கு-கிழக்கை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சினைக்கு அமைதித் தீர்வு காண முன்வரவேண்டும்.

சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்க நாடாளுமன்ற முறையே சிறந்தது என்று கூறி ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கு சில அரசியல் கட்சிகள் மேற்கொண்டுள்ள முடிவுகளை நான் எதிர்க்கின்றேன்.

சிறுபான்மையினர் மீது கொடுமைகள் இழைக்கப்பட்டு அவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டது நாடாளுமன்ற அரசியல் முறையினால் தான் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி சுதந்திரமாகச் செயல்பட்டு, குறுகிய கட்சி அரசியலுக்கு உட்படாமல் சுதந்திரமாக முடிவுகளை எடுக்க முடியும். இவ்வாறு அமைச்சர் தொண்டமான் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். [உ-ஐ]


# எடிசன் அக்கடமி

[யாழ் - இந்துக்கல்லூரி அருகில்]
411/1, கே. கே. எஸ். வீதி; யாழ்ப்பாணம்.

O/L DAY CLASS
SAT & SUN CLASS

★ புதிய பிரிவுகள் ஆரம்பம்
08 - 06 - 93 செவ்வாய்
மு ப. 8 மணி

எமது வழமையான ஆசிரியர் குழுவால் வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்

O/L கணிதம்
புதிய பிரத்தியேக வகுப்பு
திரு. B. P. பாஸ்கரன்

பாடத்திட்டம் முற்றாக பூர்த்தியாக்கப்படும்
ஆரம்பம்: 08 - 06 - 93 செவ்வாய்
பி. ப. 5 மணி

(26009)



"ராசி" சுழல் கிண்ணத்திற்காக
யாழ். ஐங்கரன் விளையாட்டுக் கழகம்
நடத்தும்
மென்பந்து கிரிக்கெட் போட்டி
# இறுதியாட்டம்

இன்று பிற்பகல் 3 மணிக்கு, யாழ். ஆஸ்பத்திரி வீதி கழக மைதானத்தில்

நொதேண் விளையாட்டுக் கழகம்
எதிர்
அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்

பிரதம விருந்தினர்; திரு. செ. பத்மநாதன் [செயல் திட்டப் பணிப்பாளர், யாழ். செயலகம்]

சிறப்பு விருந்தினர்; திரு. பூ. ரவிதரன் (ராசி சில்க்ஸ் உரிமையாளர் யாழ்ப்பாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஐங்கரன் விளையாட்டுக் கழகம்
யாழ்ப்பாணம்.

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/5223)


# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரைசாமி சொர்ணம்மா

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னுத்துரைசாமி சொர்ணம்மா நேற்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னுத்துரைசாமியின் மனைவியும், காலஞ்சென்ற வடிவாம்பிகையின் (பற்பனா) தாயாரும், கொழும்பு ஆமர் வீதி முன்னைநாள் பிரபல வர்த்தகர் சு. கணேசனின் மாமியும், ஸ்ரீதரன் (சுவிஸ்), வாசுகி (சுவிஸ்), வளர்மதி (கொழும்பு), அனுஷியா (சுவிஸ்), ஐங்கரன் (சுவிஸ்), விக்கினராசா (சுவிஸ்), சுசிலாவதி (சுவிஸ்), திருநிறைசெல்வன் (சுவிஸ்) ஆகியோரின் பேத்தியும், விபூசணன் (சுவிஸ்), சாத்விகன் (சுவிஸ்) ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்ற அம்பலவாணர் - தங்கமுத்துப்பிள்ளையின் மகளும், புங்குடுதீவு காலஞ்சென்ற சுப்பையா - காலஞ்சென்ற செல்லமுத்து ஆகியோரின் சம்பந்தியும், ராசம்மா (ராசம்), மூத்தையா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கொழும்பு வர்த்தகர் நாகநாதியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-06-93) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
74/39, அரசடி லேன், யாழ்ப்பாணம்.
சு. கணேசன் [மருமகன்]
ராசம்மா [சகோதரி]

[26011]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org